**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 12/2023**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-7/Lw-12 |
| Name | : | Dr.G. Subbulakshmi |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி ஈரோடு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் காணொளி அறையில் நேரில் ஆஜராகி காணொளி மூலமாக அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் இளந்தகுட்டை அரசு மருத்துவமனையில் உதவி அரசு மருத்துவராக பணியில் உள்ளேன். கடந்த 20.12.2021 அன்று இரவு 10.40 மணியளவில் நான் திருப்பூர் அரசு மருத்துவமனையில் மருத்துவ பணியில் இருந்தபோது கன்னையன் மகன் கார்த்திக் என்பவரை குணசேகரன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அந்த சமயத்தில் அவர் அடையாளம் தெரிந்த நான்கு நபர்களால் 20.12.2021 அன்று 9.45 இரவு மணியளவில் மண்ணரை மதுபான கடை அருகில் அருவாளால் வெட்டியதாகவும் சொன்னார். அவருக்கு இடது கை பெருவிரல்

வெட்டப்பட்டும் இடது உள்ளங்கை வலது உள்ளங்கை வலது முட்டி, வலது பக்க பின் மண்டையில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. அவருக்கு நான் முதல் உதவி சிகிச்சை அளித்து AR No.1572927 விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு அன்று அறுவை சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியுள்ளேன். காயச்சான்றிதழின் படி அவருக்கு ஏற்பட்ட காயவிவரங்கள் இடது கை பெருவிரல் இல்லை மற்றும் இடது பக்க உள்ளங்கையில் வெட்டுக்காயம் 5*1*1 அளவில் இருந்தது.

2. இடது உள்ளங்கையில் 10*2*2 cm அளவில் வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. வலது பக்க உள்ளங்கையில் வெட்டுக்காயம் 4*1*1 cm அளவில் வெட்டுக்காயமும். வலது பின்புற மண்டையில் 10*2*2 cm மற்றும் 2*0.5*0.5 என்று அளவில் இரண்டு வெட்டுக்காயங்களும், வலது முட்டியில் 2*1*1 செ.மீ. 1*1*0.5 செ.மீ அளவில் வெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட முதல் காயம் மட்டும் கொடுங்காயம் என்று சான்றிதழ் வழங்கியுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் AR entry அ.சா.ஆ– 4. காயச்சான்றிதழ் அ.சா.ஆ– 5. காயச்சான்றிதழ் பெறும் சமயத்தில் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புலன்விசாரணை அதிகாரி தங்களிடம் எந்த ஒரு ஆயுதங்களையும் காண்பித்து விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரி. சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

25.09.2025 அன்று காலை 12.20 மணியளவில் முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு காணொளி அறையில் ஆஜராகி அங்கு உதவி நிரலர் ஆசைதம்பி முன்னிலையில் சாட்சியம் அளித்து தட்டச்சு செய்யப்பட்டு, இந்த சாட்சியம் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி சரியாக உள்ளதென சாட்சி ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.09.25 17:43:27 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.